செ.வெ. எண்: 271 நாள்: 25.04.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.4.2012) தலைமைச் செயலகத்தில், 1 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக திருநெல்வேலியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகக் கட்டடம், கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்து, பதிவுத் துறை மற்றும் வணிகவரித் துறையில் பணிக் காலத்தில் மறைந்த 32 அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, பொன்னீற்றான் குளத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் திருநெல்வேலி மண்டலத் துணைப் பதிவுத் துறை தலைவர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), முதல் இணை சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் பர்கிட் மாநகர் சார் பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் செயல்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலத்திலும், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரிலும் தலா 28 லட்சம் ரூபாய் செலவில் சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன.

பதிவுத் துறை அலுவலகங்களுக்கென மொத்தம் 1 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய அலுவலகங்களில், அலுவலர்களுக்கான அறைகளுடன் கணினி அறை, பதிவுறுக்கள் பாதுகாப்பு அறை, பொது மக்களின் நலனுக்காக கூடுதல் வசதிகளான நவீன கழிப்பறை, காத்திருக்கும் அறை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கான சாய்தள மேடையமைப்பு, அகலமான நடைபாதை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பதிவுத் துறையில் பணிக் காலத்தில் மறைந்த 17 அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கும், வணிகவரித் துறையில் பணிக் காலத்தில் மறைந்த அரசு ஊழியர்களின் 15 வாரிசுதாரர்களுக்கும், ஆக மொத்தம் 32 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட வாரிசுதாரர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர், வணிகவரி ஆணையர், பதிவுத் துறை தலைவர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–**9.**
நாள்: 25.4.2012